

வேலூர் மாநகரக் கழக அலுவலகத்தில் மத்திய மாவட்டக் கழக அவைத் தலைவர் தி.அ.முகமது சகி முன்னிலையில் 50க்கும் மேற்பட்டோர் கழகத்தில் இணைந்தனர். உடன் மாநகரக் கழக நிர்வாகிகள், இளைஞர் அணி நிர்வாகிகள் உள்ளனர்.

## சென்னை வடக்கு மாவட்டம் - பெரம்பூர் தெற்கு பகுதி

## 44 அ-வது வட்டக் கழகப் பொறுப்பாளர் நியமனம்

### தலைமைக் கழக அறிவிப்பு!

சென்னை வடக்கு மாவட்டம், பெரம்பூர் தெற்கு பகுதி, 44 அ-வது வட்டச் செயலாளர் ஆர்.எஸ்.மனோகரன் அவர்கள் மறைவெய்திய காரணத்தால், கழகப் பணிகள் செவ்வனே நடைபெற **எஸ்.அருள்** (21, ஆசிரியர் தெரு, வியாசர்பாடி, சென்னை - 600 039) அவர்கள் 44 அ-வது வட்டக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட வட்டக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை-18
நாள்- 11.03.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.



வேலூரில் ஒன்றிய அமைச்சரைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் நடத்திய கழகத்தினர். அவரது உருவ பொம்மையை தீயிட்டு கொளுத்தினர். மாவட்ட அவைத் தலைவர் தி.அ.முகமது சகி, மாநகரக் கழகச் செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ., மேயர் சுஜாதா உள்ளிட்டோர் இதில் பங்கேற்றனர்.

### புதிய கல்விக் கொள்கை தமிழ்நாட்டுக்கு மட்டுமல்ல; ஒட்டுமொத்த நாட்டுக்குமே கேடு!

# ஆணவத்தின் உச்சிக்கே சென்று வரம்பு மீறுவது ஒன்றிய அமைச்சருக்கு அழகல்ல!

## "தீக்கதிர்" நாளேடு தலையங்கத்தில் கண்டனம்!

*சென்னை, மார்ச் 12 -*

புதிய கல்விக் கொள்கை தமிழ்நாட்டுக்கு மட்டுமல்ல; ஒட்டுமொத்த நாட்டுக்குமே கேடு என்றும் ஆணவத்தின் உச்சிக்கே சென்று வரம்பு மீறுவது ஒன்றிய அமைச்சருக்கு அழகல்ல என்றும் "தீக்கதிர்" நாளேடு தலையங்கத்தில் கண்டனம் தெரிவித்துள்ளது.

அது வருமாறு :-

ஒன்றிய கல்வித்துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் புதிய கல்விக் கொள்கையையும், அதன் வழியாக மும்மொழி என்ற பெயரில் திணிக்கப்படும் இந்தி ஆதிக்கத்தையும், தமிழ்நாடு அரசு ஏற்க வேண்டுமென வம்படி வழக்கு செய்து வருகிறார்.



தீக்கதிர்

2025 மார்ச் 11 செவ்வாய்க்கிழமை

யாகாவாராயினும் நா காக்க...

ஒன்றிய கல்வித்துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் புதிய கல்விக் கொள்கையையும், அதன் வழியாக மும்மொழி என்ற பெயரில் திணிக்கப்படும் இந்தி ஆதிக்கத்தையும், தமிழ்நாடு அரசு ஏற்க வேண்டுமென வம்படி வழக்கு செய்து வருகிறார்.

தமிழ்நாட்டிற்கு ஒன்றிய அரசு தரவேண்டிய ரூ.2152கோடி தொகையையும் விடுவிக்க மறுக்கிறார். இதன்மூலம் தமிழக மாணவர்களின் கல்வி உரிமைமீது மண்ணள்ளிப்போட முயல்கிறார். இதற்கு தமிழ்நாட்டில் கடும் எதிர்ப்பு எழுந்துள்ளது.

இந்நிலையில் நாடாளுமன்றத்தில் பேசிய ஒன்றிய அமைச்சர் தர்மேந்திர பிரதான் தமிழ்நாட்டைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களையும், அவர்களை வாக்களித்து தேர்வு செய்த தமிழ்நாட்டு மக்களையும் ஒருசேர அவமதித்துள்ளார். தமிழ்நாட்டைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் அநாகரீகமானவர்கள் என்று வரம்பு மீறி வாயாடியுள்ளார்.

தமிழ்நாட்டிற்கு ஒன்றிய அரசு தரவேண்டிய ரூ.2152 கோடி தொகையையும் விடுவிக்க மறுக்கிறார். இதன்மூலம் தமிழக மாணவர்களின் கல்வி உரிமை மீது மண்ணள்ளிப் போட முயல்கிறார். இதற்கு தமிழ்நாட்டில் கடும் எதிர்ப்பு எழுந்துள்ளது.

இந்நிலையில் நாடாளுமன்றத்தில் பேசிய ஒன்றிய அமைச்சர் தர்மேந்திர பிரதான் தமிழ்நாட்டைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களையும், அவர்களை வாக்களித்து தேர்வு செய்த தமிழ்நாட்டு மக்களையும் ஒருசேர அவமதித்துள்ளார். தமிழ்நாட்டைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் அநாகரீகமானவர்கள் என்று வரம்பு மீறி வாயாடியுள்ளார்.

இதற்கு நாடாளுமன்றத்திலும், அவைக்கு வெளியிலும் தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். அமைச்சர் மீது உரிமை மீறல் நோட்டீஸ் கொடுக்கப் போவதாக தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி தெரிவித்துள்ளார்.

கல்வித்துறை மத்திய - மாநில அரசுகளின் ஒத்திசைவு பட்டியலில் இருக்கும் நிலையில் புதிய கல்விக் கொள்கையையோ, மும்மொழிக் கொள்கையையோ ஏற்கவும், மறுக்கவும் சம்பந்தப்பட்ட மாநிலங்களுக்கு முழு உரிமை உண்டு. ஆனால் பிளாக் மெயில் செய்வது போல மிரட்டுவதோடு தமிழ்நாட்டிற்கு கிடைக்க வேண்டிய நிதியை மறுக்கிறது ஒன்றிய பா.ஜ.க. அரசு.

நிதி தர முடியாது என்று பகிரங்கமாகவே மிரட்டுகிறார் ஒன்றிய அமைச்சர் தர்மேந்திர பிரதான். அத்துடன் பிரச்சனையை திசை திருப்பும் வகையில் பிஎம்ஸ்ரீ திட்டத்தை முதலில் ஏற்க முன்வந்ததாகவும் பிறகு சூப்பர் முதலமைச்சர் சொன்னதால் நிலையை மாற்றிக் கொண்டதாகவும் மக்களவையில் கூறியுள்ளார்.

இதற்கு பதிலளித்துள்ள தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், நாங்கள் உங்கள் திட்டத்தை செயல்படுத்த முன்வரவும் இல்லை; அப்படி முன்வராத என்னை யாரும் வற்புறுத்தவும் முடியாது என்று கூறியுள்ளார். தமிழ்நாட்டிற்குரிய நிதியை தர முடியுமா? முடியாதா? என்பதற்கு மட்டும் பதில் சொல்லுமாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வினவியுள்ளார்.

தமிழ்நாட்டு எம்.பி.க்களை நாகரீகமற்றவர்கள் என்று கூறியதை திரும்பப் பெற்றுக் கொள்வதாக வேறு வழியின்றி தர்மேந்திர பிரதான் கூறியுள்ள போதும் அதற்காக அவர் வருந்துவதாகத் தெரியவில்லை. அதனால் தமிழ்நாட்டு மக்களிடம் தர்மேந்திர பிரதான் பகிரங்க மன்னிப்புக் கேட்க வேண்டும். ஆர்எஸ்எஸ் மற்றும் கார்ப்பரேட் முதலாளிகளின் நலனுக்காகவே வடிவமைக்கப்பட்டுள்ள புதிய கல்விக் கொள்கை தமிழ்நாட்டுக்கு மட்டுமல்ல, ஒட்டுமொத்த நாட்டுக்குமே கேடு. ஆணவத்தின் உச்சிக்கே சென்று வரம்பு மீறுவது ஒன்றிய அமைச்சருக்கு அழகல்ல.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## திண்டுக்கல் கிழக்கு மாவட்டம்

## நிலக்கோட்டை மேற்கு ஒன்றியம் அம்மையநாயக்கனூர் பேரூர்க் கழகப் பொறுப்பாளர் - பொறுப்புக்குழு உறுப்பினர்கள் நியமனம்

### தலைமைக் கழக அறிவிப்பு!

திண்டுக்கல் கிழக்கு மாவட்டம், நிலக்கோட்டை மேற்கு ஒன்றியம், அம்மையநாயக்கனூர் பேரூர்ச் செயலாளர் பெ.விஜயகுமார், ஒன்றிய பொறுப்புக்குழு உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ள காரணத்தால், பேரூர்க் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற, அம்மையநாயக்கனூர் பேரூர்க் கழக பொறுப்பாளர் - பொறுப்புக்குழு உறுப்பினர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

பொறுப்பாளர்: **மு. ராஜாங்கம்**, அம்மையநாயக்கனூர், நிலக்கோட்டை, திண்டுக்கல் மாவட்டம்.

பொறுப்புக்குழு உறுப்பினர்கள்:

1.ஜார்ஜ் ஜோசப், அம்மாபட்டி, 2.சிவமுருகன், நாகையகவுண்டன்பட்டி,3.எஸ். நடேசன், கொளிஞ்சிபட்டி, 4.பி.திருமூர்த்தி, கே.இராஜதானிக்கோட்டை, 5.நா.விமல்குமார், ஜெகநாதபுரம்,6.பி. வண்ணக்கிளி, ஏ.புதூர், கொடை ரோடு, 7.பி.பாலகிருஷ்ணன், மாவுத்தன்பட்டி,8.சேட் மோகன், மாவுத்தன்பட்டி. 9.போ.மணிகண்டன், பொம்மனம்பட்டி, 10.பி. பாண்டி, தளி,11.எம். முகமது நசீர், அம்மையநாயக்கனூர், 12.கிங் ஜெயராஜ், மெயின் ரோடு, கொடை ரோடு.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை-18
நாள்- 11.03.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### நன்னிலம் நடராசன்

### மார்ச் 12 (2002)



நன்னிலம் கிளைக் கழகத்தைக் கட்டிக்காக்க செயலாளர் பொறுப்பினை ஏற்று இருபது ஆண்டுகள் நன்னிலம் வட்டத்தில் கழகம் ஆல்போல் வளர்த்தவர். கழகக் கொள்கைப் பரப்பு இணைச் செயலாளராக பணியாற்றியவர்.

தி.மு.கழகம் நடத்திய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பல போராட்டங்களில் பங்கேற்றவர். நெருக்கடி காலத்தில் மிசா சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு ஓராண்டு சிறையில் இருந்தவர்.

இளமைப்பருவம் முதல் இறுதிநாள் வரை கழகத்தின் கொள்கை முழக்கம் செய்தவர். தன்னுடைய நகைச்சுவை பேச்சால் தமிழகத்தின் பட்டிதொட்டியெங்குமுள்ள கழகத் தோழர்களின் அன்பைப் பெற்றவர்.

தலைவர் கலைஞர் அவர்கள் 1991ஆம் ஆண்டு நடைபெற்ற முப்பெரும் விழாவில் தலைமைக் கழகச் சார்பில் "கலைஞர் விருது" வழங்கி சிறப்பித்தார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

### கடலூர் மேற்கு மாவட்டம் மங்கலம்பேட்டையில்! "தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும்"

# ஒன்றிய அரசைக் கண்டித்து மாபெரும் கண்டனப் பொதுக்கூட்டம்!

## அமைச்சர் க.பொன்முடி சிறப்புரை! மாவட்டச் செயலாளர் - அமைச்சர் சி.வி.கணேசன் அறிவிப்பு!

*கடலூர், மார்ச் 12-*

தலைமை கழக அறிவிப் பிற்கி னங்க ஒன்றிய அரசை கண்டித்து "தமிழ்நாடு போராடும் தமிழ்நாடு வெல்லும்" என்ற கண்டன முழக்கத்து டன் மாபெரும் கண்டன பொதுக்கூட்டம் நடைபெறுகிறது என்று கடலூர் மேற்கு மாவட்டக் கழக செயலாளர் அமைச்சர் சி.வி. கணேசன் அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை கீழ் வருமாறு:

கழக தலைவர் முதலமைச்சர் மு. க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க மார்ச் 12 ம் தேதி அன்று "தமிழ்நாடு போராடும் தமிழ்நாடு வெல்லும்" ஒன்றிய அரசுக்கு எதிரான கண்டனப் பொதுக்கூட்டம் கடலூர் மேற்கு மாவட்டம் மங்கலம்பேட்டை தேரடிவீதி, அருகில் அண்ணா திடலில் மாலை 5 மணியளவில் நடைபெறுகின்றது.

தொகுதி மறுசீரமைப்பு என்ற பெயரில் தமிழ்நாட்டின் நாடாளுமன்றத் தொகுதிகளின் எண்ணிக்கையை குறைத்து நம்மை இ ர ண் ட ா ந் த ர குடிமக்களாக்க நினைக்கும் மோடி அரசின் சதியை மக்களிடம் எடுத்துக் கூறும் விதமாகவும். மும்மொழிக் கொள்கை என்ற பெயரில் இந்தித் திணிப்பை மேற்கொள்வதை மக்களிடம் புரிய வைக்கும் விதமாகவும், எனது (சி.வி. கணேசன் ) தலைமையில் கழக துணைப் பொதுச் செயலாளர் வனத்



துறை அமைச்சர் க.பொன்முடி, கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் ச.அ. பெருநற்கிள்ளி ஆகியோர் கண்டன உரை ஆற்றுகின்றனர்.

இக்கூட்டத்திற்கு நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா, இராசேந்திரன் முன்னிலையில் வகிக்கின்றார்.

அதுசமயம் மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுகுழு, உறுப்பினர்கள், முன்னாள் இந்நாள் சட்ட மன்ற உறுப்பினர்கள், ஒன்றிய கழக, நகர கழக, பேரூர் கழக, கிளை, வார்டு, கழக செயலாளர்கள், நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், பாக முகவர்கள் மற்றும் கழக மூத்த முன்னோடிகள் அனைவரும் தவறாது பங்கேற்று சிறப்பிக்க வேண்டும் என அன்புடன் கேட்க்கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் சி.வி. கணேசன் தனது அறிக்கையை கேட்டுக் கொண்டுள்ளார்.

# மாதவரம் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில் தண்ணீர் பந்தல் திறப்பு!

*மாதவரம், மார்ச் 12-*

சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் பகுதி திமுக சார்பில் தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் அவர்களின் ஆணைப்படி, கோடை வெயிலின் தாக்கத்தை குறைக்க பொதுமக்களுக்கு தண்ணீர் பந்தல் திறந்து வைக்கப்பட்டது.

மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில் பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் ஏற்பாட்டில்,17 வது வட்டம் சின்ன தோப்பு வடபெரும்பாக்கம் பகுதியில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணாவின் திருவுருவ சிலைக்கு எதிரே, ஆட்டோ ஓட்டுனர்கள், பொதுமக்கள் பயன்படுத்தும் வகையிலும், பேருந்து நிலையம், வாகன ஓட்டிகளுக்கு வசதியாக பொதுமக்கள் பயன்பெறும் வகையில் தண்ணீர் பந்தல் திறந்து வைக்கப்பட்டது.

17 வது வட்டச் செயலாளர் கே. கருணாகரன் முன்னிலையில், வட்ட நிர்வாகிகள் சி.பாலாஜி, சி.மூர்த்தி, மாவட்ட விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் கே.சண்முகபிரியன், பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் எம்.என்.அஜய் தென்னவன், மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் டி. வினோத், ஜி, ராஜ்குமார், பாக முகவர்கள் என். நாகராஜன், டி. திவாகர்,வி.சுமீர், ஜி.கார்த்திக் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

பொதுமக்கள் பயன்பெறும் வகையில் தண்ணீர் பந்தலில் தர்பூசணி, இளநீர், வெள்ளரிக்காய், மாதுளம் பழம், பனங்காய் மற்றும் குளிர்பானங்கள் ஆகியவை பொதுமக்களுக்கு வழங்கப்பட்டது.

## திண்டுக்கல் கிழக்கு மாவட்டம்

## ஆத்தூர் கிழக்கு ஒன்றியம் சின்னாளபட்டி பேரூர்க் கழகப் பொறுப்பாளர் - பொறுப்புக்குழு உறுப்பினர்கள் நியமனம்

### தலைமைக் கழக அறிவிப்பு!

திண்டுக்கல் கிழக்கு மாவட்டம், ஆத்தூர் கிழக்கு ஒன்றியம், சின்னாளபட்டி பேரூர்ச் செயலாளர் ஆ.மோகன்ராஜ் சரிவர கழகப் பணியாற்றாத காரணத்தால், அவரை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, பேரூர்க் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற சின்னாளபட்டி பேரூர்க் கழக பொறுப்பாளர் - பொறுப்புக்குழு உறுப்பினர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

பொறுப்பாளர் : **தி.பாலகிருஷ்ணன்**,எண்.15-9-9பி, தேவி நகர், காமாட்சி காலனி, சின்னாளபட்டி - 624 301. திண்டுக்கல் மாவட்டம்.

பொறுப்புக்குழு உறுப்பினர்கள் : 1.சு. நாகக்கண்ணன், முத்தமிழ் நகர், சின்னாளபட்டி,2.திருமதி மு.கீர்த்தனா, ஏ.கே.எஸ்.தெரு, சின்னாளபட்டி, 3.சி.சோலைராஜ், ஜீவா நகர் 4வது தெரு, சின்னாளபட்டி,4.செ.கோபிநாத், ராமவிலாஸ் சோடா பேக்டரி தெரு, கீழக்கோட்டை,5.அ.வேல்முருகன், மந்தை தெரு, சிக்கனம்பட்டி, சின்னாளபட்டி., 6.ரா.குணசேகரன், பி.எஸ்.பி.டி. தெரு, சின்னாளபட்டி,7. கா. முத்துவேல், செக்காபட்டி மெயின் ரோடு, சின்னாளபட்டி,8.ஆ. கிருஷ்ணன், ராயல் தியேட்டர் பின்புறம்,அண்ணாநகர்,9.சு. பொம்மையா, ஸ்ரீசாய் நிவாஸ், ஜீவாநகர், சின்னாளபட்டி, 10.த.தம்பித்துரை,ஏ.கே.எஸ்.தெரு,மேட்டுப்பட்டி,சின்னாளபட்டி.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை-18
நாள்- 11.03.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

# ஒழுங்கு நடவடிக்கை ரத்து!

### தலைமைக் கழக அறிவிப்பு!

திருப்பூர் கிழக்கு மாவட்டம், காங்கேயம் நகரத்தைச் சேர்ந்த ந.சூரியபிரகாஷ் அவர்கள் தனது செயலுக்கு வருத்தம் தெரிவித்து மீண்டும் கழகப் பணியாற்றிட அனுமதி அளிக்குமாறு, **கழகத் தலைவர்** அவர்களிடம் வைத்த கோரிக்கையினை ஏற்று, அவர் மீதான ஒழுங்கு நடவடிக்கை ரத்து செய்யப்பட்டு, இன்று முதல் கழக உறுப்பினராகச் செயல்பட அனுமதிக்கப்பட்டுள்ளார்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018
நாள்- 11.03.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

# ஒழுங்கு நடவடிக்கை ரத்து!

### தலைமைக் கழக அறிவிப்பு!

தேனி வடக்கு மாவட்டம், தேனி நகரத்தைச் சேர்ந்த எம்.வி.கே.ஜீவா அவர்கள் தனது செயலுக்கு வருத்தம் தெரிவித்து மீண்டும் கழகப் பணியாற்றிட அனுமதி அளிக்குமாறு, **கழகத் தலைவர்** அவர்களிடம் வைத்த கோரிக்கையினை ஏற்று, அவர் மீதான ஒழுங்கு நடவடிக்கை ரத்து செய்யப்பட்டு, இன்று முதல் கழக உறுப்பினராகச் செயல்பட அனுமதிக்கப்பட்டுள்ளார்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018
நாள்- 11.03.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.



விழுப்புரம், கோலியனூர் தெற்கு ஒன்றியம், அத்தியூர் திருவாதி, வேலியம்பாக்கம் ஆகிய ஊராட்சிகளில் விழுப்புரம் மத்திய மாவட்ட கழக பொறுப்பாளரும், சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் இரா.இலட்சுமணன் பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் செ.புஷ்பராஜ், தே.முருகவேல், இ.சச்சிதானந்தம், டி.என்.ஜெ.சம்பத், வனிதா ஹிராமன், புகழ் செல்வகுமார், இரா.கேசவன், பிரசன்னா தேவி, கோ.தேவகிருஷ்ணன், வழக்கறிஞர் இரா.கண்ணப்பன், எம்.கலியமூர்த்தி, சடகோபன், என்.ஆர்.மணி, ராமதாஸ், நாகஜோதி, ஏழுமலை, மீனாட்சி அழகப்பன், கனகஜோதி, மான், சிவா, அன்பழகன், ஜெகதீசன், சிவகுரு, கனகசபை, ராமமூர்த்தி, முருகதாஸ், சண்முகசுந்தரம், தங்கராசு, ராகவேலு, ரகு, மகேந்திரன் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.